**OS No.181/2015**

**PW–1 –மனோஜ்**

**த/பெ.**

**நாள். 29.01.2026**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை. 3–ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை 1–ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார். அதன் பின்பு முதல் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை.</u>**

1.எனக்கு தற்போது 31 வயது. என் தாத்தா பழனிசாமி 2005 ஆம் ஆண்டு இறந்து போனார். என் தாத்தா இறக்கும்போது எனக்கு சுமார் பத்து வயது தான் இருக்கும். அந்த சமயத்தில் என் தாத்தாவானவர் தன்னுடைய மனைவியான என் பாட்டிக்கு உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் எனக்கு உயில் எழுதி வைத்த விவரமே தெரியாது. அந்த சமயத்தில் நான் கொங்கு ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தேன். ஹிந்துஸ்தான் காலேஜில் பட்டப்படிப்பு முடித்தேன்.

2.கல்லூரி படிப்பு காலங்களில் எனக்கு படிப்பு நேரம் போக நான் ஒரு பகுதி நேர வேலைக்கும் சென்று கொண்டு தான் இருந்தேன். என் தாத்தா இறந்தபோது நான் போய் பார்த்ததில்லை என்று சொன்னால் சரி இல்லை நான் என் தாத்தா உயிருடன் இருக்கும்போதில் இருந்து அவரை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். என் தாயார் 2001 ஆம் ஆண்டு இறந்து போனார். குடும்ப ஏற்பாடு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான் அப்பா சொல்லியதை வைத்து தான் சொல்கிறேன்.

3.குடும்ப ஏற்பாடு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது 2001 ஆம் ஆண்டு நடந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்தில் இரண்டு ஐட்டங்களிலும் கட்டிடம் இருக்கிறது என்று சொன்னால் சரிதான் அங்கு காலி மனை கிடையாது என்றும் சொன்னால் சரிதான். நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் தாவா சொத்தில் இருக்கிறோம் என்பதை நிரூபிக்க நாங்கள் எந்த விதமான

வருவாய்த்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம். வாதிகளாகிய நாங்கள் கூட்டு சுவாதி இனத்தில் இல்லாத போது நாங்கள் நீதிமன்ற கட்டணம் தவறான பிரிவின் கீழ் கட்டி இருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் இருக்கும் கட்டிடங்களுக்கு நாங்கள் வாடகை வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

4. வரி ரசீதுகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இல்லை. எனக்கு வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் நேரடியாக தெரியாத போது என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி அல்ல. தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சொன்னால் சரியல்ல,

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.